**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**IA NO.779/2022**

**In**

**O.S No.107/2019**

ஆரோக்கியசாமி .........**மனுதாரர்/வாதி**

**//எதிர்//**

1. மாவட்ட ஆட்சியர்,

2. வட்டாட்சியர்,

3. கிராம நிர்வாக அலுவலர் ......**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கந்தசாமி, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.G.கண்ணன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151-ன் கீழ் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கு தனது தரப்பு விசாரணைக்கு போடப்பட்டிருக்கிறது என்றும், மேற்படி PW1 சாட்சி விசாரணை முடிவுற்ற நிலையில் PW2-ற்கு வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி கடந்த 18.11.2022 அன்று மனுதாரர்/வாதியின் சாட்சியம் அன்றே முடிக்கப்பட்டுவிட்டது என்றும், மனுதாரர் கடந்த ஒரு மாத காலமாக மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு நாட்டு மருந்து எடுத்து

வந்ததால் மேற்படி 18.11.2022 அன்று தனது தரப்பில் முறையாக வேறொரு சாட்சியை ஏற்ற இயலாமல் போய்விட்டது என்றும், மேற்படி தனது தரப்பை எம்பிக்க முக்கியமான சாட்சிகளை தனது தரப்பில் விசாரிப்பது மிக்க அவசியமும், நியாயமுமாக இருக்கிறது என்றும், எனவே கடந்த 18.11.2022 அன்று தனது தரப்பு PW1 விசாரணை முடிக்கப்பட்டுவிட்டதை மீண்டும் Re-open செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்:-</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக் கூடிய ஒன்றாக உள்ளது என்றும், இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் மனுதாரர்/வாதிக்கு ஒரு மாத காலமாக மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு நாட்டு மருந்து எடுத்து வந்ததால் கடந்த 18.11.2022-ம் தேதிய மனுதாரர்/வாதி தரப்பில் வேறொரு சாட்சியை ஏற்ற இயலாமல் போய்விட்டதாக சொல்லியுள்ளது மனுவின் தோதிற்காக சொல்லப்பட்ட பொய்யான சங்கதிகளாகும் என்றும், மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்வதற்கு எந்தவிதமான நியாயமான காரணமும் மனு பிராமாணப்பத்திரிக்கையில் சொல்லப்படவில்லை என்றும், மனுதாரர் வேறுசில வழக்குகளுக்காக அடிக்கடி சமூகம் நீதிமன்றத்திற்கு வரும் வழக்கமுடையவர் என்பதால் மனுதாரர் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அதனால் இவ்வழக்கில் வேறொரு சாட்சியை விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாக சொல்லியுள்ளது காரணார்த்தமாகும் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே கூடுதல் சாட்சியை விசாரிக்காமல் இருந்துவிட்டு தற்போது இவ்வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் இந்த பிரதிவாதிகள் தரப்பில் யாரை சாட்சியாக விசாரிப்பார்கள் என்பதை தெரிந்துகொண்டு பின்னிட்டு வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணை செய்ய வேண்டி மட்டுமே தற்போது இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் மேற்படி மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**6. பிரச்சனைக்கான தீர்வு:-**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151-ன் கீழ் 18.11.2022-ம் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அவரது மனுவில் வாதி கடந்த ஒரு மாத காலமாக மஞ்சள் காமாலை நோயால் பதிக்கப்பட்டு, நாட்டு மருந்துகள் எடுத்து வந்ததன் காரணமான 18.11.2022-ம் தேதியன்று அவரது தரப்பில் சாட்சி விசாரிக்க முடியாமல் போய்விட்டதாகவும், அவரது தரப்பில் சாட்சிகளை விசாரிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாக இருக்க வேண்டியதாக உள்ளது என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் அவருடைய எதிர்வழக்குரையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது இல்லை எனவும், மனுதாரர் தரப்பில் வேண்டுமென்றே சாட்சிகளை விசாரிக்காமல் இருந்துவிட்டு, பிரதிவாதிகள் தரப்பில் யாரை சாட்சியாக விசாரிக்கிறார்கள் என தெரிந்துகொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் மனுதாரர் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டார் என்பதை காட்டக்கூடிய மருத்துவ சான்றிதழ்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் வாதியானவருக்கு தனது கட்சியை நிரூபிக்கும் பொறுப்பும், கடமையும் உள்ளது.

4) மாண்புமிகு உச்சநீதிமன்றம் **"K.K.Velusamy Vs. N.Palanisamy, (2011) 11 SCC 275"**, என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

"We may add a word of caution. The power under section 151 or Order 18 Rule 17 of the Code is not intended to be used routinely, merely for the asking. If so use, it will defeat the very purpose of various amendments to the Code to expedite trials. But where the application is found to be bonafide and where the additional evidence, oral or documentary, will assist the court to clarify the evidence on the issues and will assist in rendering justice, and the court is satisfied that non-production earlier was for valid and sufficient reasons, the court may exercise its discretion to recall the witnesses or permit the fresh evidence. But if it does so, it should ensure that the process does not become a protracting tactic. The Court should firstly award appropriate costs to the other party to compensate for the delay."

எனவே மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் இம்மனுவானது ரூ.1000/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/வாதி மேற்படி ரூ.1000/- செலவுத்தொகையை எதிர்வரும் 07.03.2023-க்குள் மாண்புமிகு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, புதுக்கோட்டை முன்பாக செலுத்திவைக்க வேண்டும், தவறும்பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படும்.

முடிவாக, இம்மனு ரூ.1000/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்புச் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY
DISTRICT MUNSIF, DISTRICT MUNSIF COURT
Digitally signed by V SIVAGAMASUNDARY
Location: ARANTHANGI
Date: 2023.02.21 18:51:36 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

வரைவு / செவ்வை உத்தரவு

I.A. No.779/2022

O.S.No.107/2019

நாள்.21.02.2023.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

அறந்தாங்கி.